IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.13/2024

dated : 23.06.2025

D.W.1

Name நாகூர்கனி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

2ம் பிரதிவாதி என் தந்தை. வாதி செயலுறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் சட்டப்படிப்பு படித்து வருகிறேன். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் விவரங்கள் எனக்கு தெரியும். வாதியை 2019 முதல் தெரியும். அவர் பெயர் ராஜராம். அவரது தந்தை பெயர் தெரியாது. அவரது தந்தை பெயர் தங்கச்சாமி என்றால் அதுவும் தெரியாது. அவரது மனைவி பெயர் சண்முகத்தாய் என்றும் குழந்தைகள் பெயர் சரண்யா மற்றும் சாரதி என்றால் சரிதான். அது வழக்கின் அடிப்படையில் தெரியும். வாதி RS கோல்டு பீடி என்ற பெயரில் பீடி விற்பனை செய்து வருகிறார் என்றால் RS சோப்பு என்ற பெயரில் வியாபாரம் செய்து வருகிறார் என்பது மட்டும் தெரியும். RS கோல்டு பீடி நான் வசிக்கும் தேனி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியில் பிரபலமானது என்றால் நான் வசிக்கும் கம்பம் பகுதியில் அது பிரபலமானது என்று மட்டும் தெரியும். என் தந்தை நம்பர் ஒன் RS கோல்டு பீடி

என்ற பெயரில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் நம்பர் ஒன் RS கோல்டு பீடி என்று பெயரிடப்பட்டதற்கான காரணம் எதையும் கூறவில்லை என்றால் சரிதான். வாதி பெயரின் முதல் ஆங்கில எழுத்து R என்றும் தனது மனைவி மற்றும் குழந்தைகளின் முதல் ஆங்கில எழுத்து S என்பதாலும், தந்தை பெயர் தங்கச்சாமி என்பதால் அதன் ஆங்கில பெயரான கோல்டு என்று சுருக்கி RS கோல்டு பீடி என்று நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் வாதி வழக்கின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்துள்ளேன். 28.05.2015 ல் வணிக வரித்துறை அலுவலரால் வாதி பெயருக்கு RS கோல்டு பீடி என்ற பெயரில் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ-5 ல் ஏற்பட்ட 2015 ம் ஆண்டிற்கு முன்பு நம்பர் ஒன் RS கோல்டு பீடி பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2015 ம் ஆண்டிற்கு முன்பு வணிகமுத்திரை அலுவலகத்தில் எங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது 21.03.2015 தேதிக்கு பிந்தைய ஆவணங்கள் ஆகும். அது தொடர்புடைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 25.08.2015 க்கு முன்பாக நான் கூறும் நம்பர் ஒன் RS கோல்டு பீடி பெயரில் எங்களிடம் எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றும் அதனால்தான் அது தொடர்புடைய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 18.12.2019 தேதி வாதி டிரேடு மார்க் விண்ணப்பம் கொடுத்தது வா.சா.ஆ-6 என்றால் சரிதான்.

அதைப்போன்ற ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்ததாக எங்கள் தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-6 க்கு பின்னர் பிந்தைய காலத்திலாவது நாங்கள் டிரேடு மார்க் விண்ணப்பம் செய்துள்ளாமா என்றால் செய்துள்ளோம். அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டிரேடு மார்க் விண்ணப்பம் செய்துள்ளதாக கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. வாதி முன்னதாகவே வணிக குறியீட்டை பயன்படுத்தும் நபர் என்ற பொருளில் வரமாட்டார் என்று நான் கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 சதுர வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 அவ்வாறே வடிவமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல செவ்வக வடிவில் உள்ளது. வா.சா.ஆ.10 ல் செவ்வக வடிவிலான ஒரு கட்டம் காணப்படுகிறது என்றால் சரிதான். இரண்டு வடிவங்களிலும், மஞ்சள், பச்சை , நீலம் வர்ணங்கள் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். ஆனால் இரண்டிலும் உள்ள நிறம் அடர் மற்றும் வெளிர் நிற வேறுபாடுகள் உள்ளதாக உள்ளது. அந்த மூன்று வர்ணங்கள் தவிர வேறு வர்ணங்கள் இல்லை என்றால் சரியல்ல. ஆரஞ்சு மற்றும் வெந்நிறம் உள்ளது. வா.சா.ஆ.10 மற்றும் 11 ல் வெள்ளை நிறம் உள்ளது என்றால் சரிதான். வட்ட வடிவிலான ஒரு அமைப்பில் வா.சா.ஆ.10 ல் R.S. என்றும் வா.சா.ஆ.11 ல் No.1 R.S. Gold Beedi என்றும் கூறப்பட்டுள்ளது. அதன் வெளிப்புறம் சிவப்பு நிற வரைகோடுகளுக்குள்ளாக அமைந்துள்ளது என்றால் சரியல்ல வா.சா.,ஆ-10 ல் கருப்பு நிறத்திலும் 11 ல் வெள்ளை நிறத்திலும் அமைந்துள்ளது. இரண்டும் வட்ட  வடிவிலானது  என்றால் சரிதான்.

இரண்டிலும் வட்ட வடிவத்திற்கு கீழாக Trade Mark என்ற வாசகம் பச்சை வர்ணத்தில் உள்ளது என்றால் சரிதான். இடது மற்றும் வலது பக்கத்திற்கு மேலாக நட்சத்திர குறியீடுகள் இரண்டு ஆவணங்களிலும் உள்ளது என்றால் சரிதான். வட்ட வடிவ முத்திரைக்கு கீழாக தமிழில் கட்டு 20 எனவும் டீலக்ஸ் என்றும் மறுபுறம் அதே விவரம் ஆங்கிலத்திலும் உள்ளது ஆனால் வா.சா.ஆ-11 ல் இரண்டு இருபுறமும் தமிழில் கூறப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ-10 க்கு கீழாக RS Gold Beedi என ஆங்கிலத்திலும், வா.சா.ஆ-11 ல் No.1 R.S. Gold Beedi என மலையாளத்திலும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சதுர வடிவ மேல்பகுதியில் RS Gold Beedi என தமிழில் வா.சா.ஆ-10 ல் கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ-11 ல் அதே வர்ணத்தில் அதே தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-11 ல் வெளிப்புறம் வெள்ளை நிறத்திலும் உள்புறம் ரோஸ் நிறத்திலும் உள்ளது. வா.சா.ஆ.10 ல் ரோஸ் நிறத்தில் உள்ளது வெள்ளை நிறம் இல்லை. வா.சா.ஆ-10 மற்றும் 11 ஒரே அளவிலான உறை கட்டு என்றால் சரியல்ல வா.சா.ஆ.10 பெரிய அளவிலானது. வா.சா.ஆ-11 எத்தனை செ.மீ. நீள அகலம் என்று குறிப்பிட்டுக் கூற இயலாது. இரண்டும் ஒரே அளவிலானது என்றும் வேறுபாடு கொண்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10- மற்றும் 11 ஒரே வடிவம் உருவ அமைப்பு வர்ண தாளைக் கொண்டவை என்றால் சரியல்ல. வட்ட வடிவிலான அமைப்பிற்குள்ளாக RS பீடி என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. RS என்று வா.சா.ஆ.10 லும், No.1 R.S Gold Beedi என அ.சா.ஆ.11 லும் உள்ளது. சதுர வடிவிலும் RS கோல்டு பீடி என்றும் No.1 R.S Gold

Beedi என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். R.S Gold Beedi என்ற பெயரை குறிப்பிடாமல் எங்கள் நிறுவன பெயரை முழுமையாக குறிப்பிட முடியாது என்றால் சரிதான். வாதி நிறுவனத்தின் வணிக குறியீட்டில் முத்திரையை உருவ ஒற்றுமையுடனும், உச்சரிப்பு ஒற்றுமையுடனும் தவறாக பயன்படுத்தி வாதியின் நிறுவன நன்மதிப்பிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதமாக நாங்கள் செயல்படுகிறோம் என்றால் சரியல்ல. வாதிதான் அவ்வாறு செய்து வருகிறார். வா.சா.ஆ.10 மற்றும் 11 ற்கு உருவ ஒற்றுமை உள்ளது என்றும் உச்சரிப்பு ஒற்றுமை உள்ளது என்றும் அதனை மறைப்பதற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.23 19:11:52 +0530